ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# நம்பெருமாள் விஜயம்

(மலர் – 16) Feb 2008



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

“ஸ்ரீ அஹோபில தாஸன்” க. ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

## உட்பொதிவு


1. ஸ்ரீரங்கராஜஸ்தவம் (உத்தர பாகம்)
2. ஸ்ரீபாஷ்யம்
3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்
4. முமுக்ஷுப்படி
5. சிறிய திருமடல்
6. திருமாலை
7. குலசேகராழ்வார்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

## ஸ்ரீரங்கராஜஸ்தவம் – உத்தர பாகம்

(பகுதி – 3)

21. ஆஜ்ஞா தே ஸநிமித்த நித்ய விதய: ஸ்வர்க்காதி காம்யத்விதி:
ஸ: அநுஜ்ஞா சடசித்த சாஸ்த்ர வசதா உபாய: அபிசார ச்ருதி:
ஸர்வீயஸ்ய ஸமஸ்த சாஸிது: அஹோ ஸ்ரீரங்க ஸர்வஸ்வ! தே
ரக்ஷா ஆகூத நிவேதிநீ ச்ருதி: அஸெள த்வத் நித்ய சாஸ்தி: தத:

பொருள் – ஸ்ரீரங்கநாதா! நித்ய கர்மங்கள், நைமித்திக கர்மங்கள், இவற்றைப் பற்றிய விதிமுறைகள் ஆகியவை உன்னுடைய ஆணையாகவே உள்ளன. ஸ்வர்க்கம் முதலானவற்றை அளிக்கவல்ல காம்யகர்மங்கள் குறித்த விதிமுறையானது, “விருப்பம் இருந்தால் இயற்றலாம்”, என்னும்படி அமைந்ததாகும். விரோதிகளை அழிக்கும் வலிமையுடைய ச்ருதிகளானவை, எப்படிப்பட்ட கல்நெஞ்சத்தையும் சாஸ்த்ர வழிகளில் ஈடுபடுத்தவல்ல உபாயங்களாகவே உள்ளன. அனைத்து உலகில் உள்ள உயிர்களுக்கும் நன்மை அளிப்பவனும், அனைத்தையும் நியமித்தபடி உள்ளவனும் ஆகிய உன்னுடைய ரக்ஷகத்தை (காப்பாற்றும் செயலை) இந்த வேதங்கள் உணர்த்துகின்றன. இப்படியாக இவை உன்னுடைய கட்டளைகளாகவே எப்போதும் உள்ளன.

விளக்கம் – கர்மங்கள் மூன்று வகைப்படும். அவையாவன – நித்யகர்மங்கள் (அன்றாடம் இயற்றியே ஆக வேண்டும் என்பவை), நைமித்திக கர்மங்கள் (ச்ரார்த்தம் போன்றவை), காம்ய கர்மங்கள் (ஏதோ ஒரு பலனுக்கு ஆசைப்பட்டு இயற்றப்படுபவை). இவற்றில் முதலிரண்டும், இயற்றப்பட்டே ஆகவேண்டும் என்பதால், இவை ஆஜ்ஞாகர்மங்கள் எனப்படுகின்றன. காம்யகர்மம் என்பது – விருப்பம் இருந்தால் இயற்றலாம் – என்னும்படி உள்ளதால், அநுஜ்ஞாகர்மம் எனப்படும்.

22. அத்ர ஆஸ்தே நிதி: இதி வத் புமர்த்த பூதே
ஸித்த அர்த்தா அபி குணரூப வ்ருத்தவாதா:
ரங்கேச! த்வயி ஸகலா: ஸமந்வயந்தே ந
உபாஸா பல விதிபி: விசேஷ ஏஷாம்

பொருள் – ஸ்ரீரங்கநாதா! நீ அனைத்துவிதமான திருக்கல்யாண குணங்களைக் கொண்டவனாக உள்ளாய். இவை அனைத்தையும் தெளிவாக உபனிஷத்துக்கள் கூறுகின்றன. ஆக, இவை ஸித்தவரிகளாக இருந்தாலும், அனைத்து புருஷார்த்தங்களுக்கும் இருப்பிடமாக உள்ள உன்னைக் குறித்து, "இங்கு பெரும் புதையல் உள்ளது", என்று உனது விஷயத்தில் அந்த வரிகள் பொருத்தமாகவே உள்ளன. ஆக இது போன்று, உனது குணங்கள் முதலானவற்றை கூறுகின்றதும், உபாஸனை முதலானவற்றைக் கூறுகின்றதும் ஆகிய இந்த வரிகளில் எந்த அதிசயமும் இல்லை (அவை இயல்பாகவே உயர்ந்து உள்ளதால் ஆகும்).

விளக்கம் – வேத வரிகளில் கார்யவரிகள், ஸித்தவரிகள் என்று இரண்டு விதம் உள்ளது. கார்யவரிகள் என்பது – "இதனை இவ்விதம் செய்", "இதனைக் கொண்டு வா", போன்று தெளிவான, பார்த்து உணரக்கூடிய வகையில் அமைந்த வரிகளாகும். ஸித்தவரிகள் என்பது – "இந்தப் பொருள் இப்படிப்பட்டது", "இங்கு புதையல் உண்டு", என்பது போன்ற வரிகளாகும்.

23. தேஹ: தேஹிநி காரணே விக்ருதய: ஜாதி: குணா: கர்ம ச
த்ரவ்யே நிஷ்டிதரூப புத்திவசநா: தாத்ஸ்த்யாத் ததா இதம் ஜகத்
விச்வம் த்வயி அபிமந்யஸே ஜகதிஷே தேந அத்விதீய: தத:
மாயா உபாதி விகார ஸங்கர கதா கா நாம ரங்கேச்வர

பொருள் – ஸ்ரீரங்கநாதா! உடலானது ஆத்மாவை விட்டு நீங்காமல் உள்ளது; கார்யப் பொருள்களின் மாற்றங்கள் அனைத்தும் அவற்றின் காரணப் பொருள்களை விட்டு நீங்காமல் உள்ளன; ஒரு பொருளின் ஜாதி (இது கடம், இது குடம் போன்ற பிரிவுகள்), குணம் (நிறம் போன்றவை) மற்றும் கர்மம் (பயன்கள்) அதனை விட்டு நீங்காமல் உள்ளன. இப்படியாக ஒன்றின் அனுபவம் புத்தி மற்றும் சொற்கள் மூலம் அனுபவிக்கப்படுகின்றன. இப்படியாகவே நீயும் அனைத்து உலகத்தையும் உன்னிடம் இருந்து நீங்காதபடி ஸங்கல்பம் செய்து வைத்துள்ளாய். இதனால் நீ – அத்விதீயன் – இரண்டாவது என்று இல்லாதவன் – எனக் கூறப்படுகிறாய். இப்படி உள்ளபோது மாயாவாதங்களும், உபாதிவாதங்களும், விகாரவாதங்களும் எவ்விதம் நிலைநிற்கும்?

24. ஸ்திதி உத்பத்தி ப்ரவ்ருத்தி க்ரஸந நியமந வ்யாபநை: ஆத்மந: தே
ஶேஷ அஶேஷ: ப்ரபஞ்ச: வபு: இதி பவத: தஸ்ய ச அபேதவாதா:
ஸர்வம் கலு ஐததாத்ம்யம் ஸகலம் இதம் அஹம் தத் த்வம் அஸி ஏவம் ஆத்யா:
வ்யாக்க்யாதா ரங்கதாம ப்ரவண விஜயிபி: வைதிகை: ஸார்வபௌமை:

பொருள் – திருவரங்கத்தைப் பெரிதும் விரும்பி உறைப்பவனே! ஸ்ரீரங்கநாதா! அனைத்து உலகங்களையும் காப்பாற்றுகிறாய், அவற்றைப் படைக்கிறாய், அவை தங்கள் கர்மங்களில் நிலைநிற்கும்படிச் செய்கிறாய், ப்ரளய காலத்தில் உன் வயிற்றினுள் வைத்துக் கொள்கிறாய், அனைத்தின் உள்ளே புகுந்து அவற்றை நியமிக்கிறாய், எங்கும் பரவி உள்ளாய், அனைத்தின் ஆத்மாவாக உள்ளாய் – இப்படியாக உலகங்கள் உனக்கு அடிமைப்பட்டதாகவே உள்ளன. இதனை இவை அனைத்தும் உனது சரீரம் என்றே ஆகின்றன. ஆனாலும் உனக்கும் இவற்றுக்கும் இடையே பேதங்கள் இல்லை (ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே) என்றும் சில வாதங்கள் கூறுகின்றன. இவர்கள் – ஸர்வம் கலு, ஸகலம் இதம் அஹம், தத் த்வம் அஸி – போன்ற உபனிஷத் வாக்யங்களை, தங்கள் வாதங்களுக்குச் சான்றாகக் கொள்கின்றனர். ஆனால் வெற்றியை மட்டுமே கொண்டவர்களான வைதிகர்கள், இந்த வாக்யங்களையே தங்கள் துணையாகக் கொண்டு, அவர்கள் வாதங்களைத் தள்ளி, இந்த வாக்யங்களை பொருந்தும்படிச் செய்கின்றனர்.

விளக்கம் – அத்வைதிகள் முதலானோர் கூறுகின்ற – தத் த்வம் அஸி – நீயே அதுவாகிறாய் (ப்ரஹ்மம்) – முதலான வரிகளுக்குச் சரியான வ்யாக்யானம் மூலம் நமது முன்னோர்கள், அந்த வாதங்களைத் தள்ளினர் என்று கூறுகிறார்.

25. ஸராஜகம் அராஜகம் புந: அநேகராஜம் ததா
யதாபிமத ராஜகம் ஜகதிம் ஜஜல்பு: ஜடா:
ஜகௌ அவச சித்ரதாதரத மத்வதர்க்க
அங்கிகா ச்ருதி: சிதசிதீ த்வயா வரத நித்யராஜந்வதீ

பொருள் – மோக்ஷ வரம் அளிக்கும் ஸ்ரீரங்கநாதா! ஒரு சில மூடர்கள் செய்தது என்ன? இந்த உலகமானது அனுமானங்களுடன் கூடிய ஈச்வரனுடன் உள்ளது என்றும்; ஈச்வரனே இல்லை என்றும்; பல ஈச்வரன்கள் உள்ளனர் என்றும்; அவரவர்களின் தகுதிகளுக்கு ஏற்ப ஈச்வரன் கற்பிக்கப்படலாம் என்றும் – பலவிதமான வாதங்கள் செய்து, பிதற்றியபடி இருந்தனர். இந்த உலகமானது ஸ்வதந்த்ரமாக இருக்கும் என்றால் அதற்கு உண்டாகக் கூடிய விசித்ரமான நிலை என்ன, இந்த உலகம் அடைந்துள்ள ஏற்றத்தாழ்வுகள் யாவை என்ற வாதங்களைத்

தனது துணையாக்க் கொண்டுள்ள வேதமானது – உன்னை மட்டுமே ஈச்வரனாக அனைத்துச் சேதனங்களும் அசேதனங்களும் கொண்டுள்ளன என்று முழங்கியது.

26. ப்ரஹ்ம ஆத்யா: ஸ்ருஜ்யவர்க்கே ப்ருகுடி படதயா உத்காடிதா: ந அவதார
ப்ரஸ்தாவே தேந ந த்வம் ந ச தவ ஸத்ருசா விச்வம் ஏக ஆதபத்ரம்
லக்ஷ்மீநேத்ரா த்வயா இதி ச்ருதிமுநி வசநை: த்வத்பரை: அர்ப்பயாம:
ஸ்ரீரங்க அம்போதி சந்த்ர உதய ஜலம் உசிதம் வாதிகௌதஸ்குதேப்ய:

பொருள் – திருவரங்கம் என்னும் பெரிய கடலில் உதித்த சந்த்ரன் போன்ற திருவரங்கனே! ப்ரம்மன் உள்ளிட்ட தேவர்கள் அனைவரும் உன்னுடைய புருவநெறிப்புக்கு ஏற்றபடி, உனக்கு அடங்கி நிற்கிறார்கள். இதனால் அவர்கள் அனைவரும் படைக்கப்பட்ட பிரிவைச் (ஜீவன்கள்) சார்ந்தவர்களே ஆவார்கள் என்று பல இடங்களிலும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. உன்னுடைய திருஅவதாரங்கள் பற்றிப் பல இடங்களிலும் கூறப்பட்டது போன்று, அவர்களது அவதாரங்கள் பற்றி ஏதும் கூறப்படவில்லை. எனவே அவர்கள் உன் போன்று ஸர்வேச்வரன் அல்லர். அவர்கள் உன்னை ஒத்தவர்களும் அல்லர். வேதங்கள் அனைத்தும் இரண்டாவதாக வேறு ஒன்று இல்லாதவனும், மஹாலக்ஷ்மியின் நாதனும் ஆகிய உன்னையே இந்த உலகங்கள் ஈச்வரனாகக் கொண்டுள்ளன என்று கூறின. இப்படிப்பட்ட வேதங்கள், ரிஷிகளின் வாக்குகள் போன்றவற்றைத் துணையாகக் கொண்டு, தவறான வாதங்கள் செய்பவர்களுக்கு ஏற்ற தர்ப்பண நீரை நாங்கள் விடுகிறோம்.

27. தோஷ உபதா அவதி ஸம அதிசயாந ஸங்க்யா
நிர்லேப மங்கலகுண ஓக துகா: ஷட் ஏதா:
ஜ்ஞான ஐச்வரீ சகா வீர்ய பல அர்ச்சிஷ
த்வாம் ரங்கேச பாஸ: இவ ரத்நம் அநர்க்கயந்தி

பொருள் – திருவரங்கனே! உன்னுடைய குணங்களான ஞானம், ஐச்வர்யம், சக்தி, வீர்யம், பலம் மற்றும் தேஜஸ் ஆகியவை செய்வது என்னவென்றால் – குற்றம் அற்றவையும், குறைபாடுகள் அற்றவையும், எல்லை இல்லாதவையும், ஒப்பு இல்லாதவையும், இதனைவிட உயர்ந்தது வேறு இல்லாதவையும், எண்ணிக்கை அற்றவையும் ஆகிய எண்ணற்ற பல திருக்கல்யாண குணங்களின் கூட்டத்தை எப்போதும் சுரந்தபடி உள்ளன. ஒரு இரத்தினக் கல்லை அதன் ஒளியானது எவ்விதம் அனைவருக்கும் காட்டித்தந்து, அதனை மேன்மை அடையச் செய்யுமோ அது போன்று இந்தக் குணங்கள் உன்னை அனைவருக்கும் காட்டித் தருகின்றன.

விளக்கம் – ஞானம் என்றால் அனைத்து காலத்திலும், அனைத்துப் பொருள்களைப் பற்றியும் அறிந்தபடி இருத்தல்; பலம் என்றால் நித்யவிபூதி, லீலா விபூதி என்ற இரண்டையும் நிர்வாகம் செய்யும் மிடுக்கு; ஐச்வர்யம் என்றால் அனைத்து உலகங்களையும் தனது நிர்வாகத்தின் கீழ் வைத்து அடக்கியாளவல்ல திறன்; வீர்யம் என்றால் அனைத்தையும் நிர்வாகம் செய்யும்போதும், புருவம் கூட வியர்க்காத விதத்தில் நிற்கும் திறன்; சக்தி என்றால் எடுத்த செயலை எந்த இடையூறும் ஏற்படாமல் முடிக்கும் திறன்; தேஜஸ் என்றால் எதிரிகளும் குழம்பி மதிக்கும்படியான நிற்கும் கம்பீரம்.

28. யுகபத் அநிசம் அக்ஷை: ஸ்வை: ஸ்வத: வாக்ஷகார்யே
நியமம் அநியமம் வா ப்ராப்ய ரங்காதிராஜ
கரதலவத் அசேஷம் பச்யஸி ஸ்வப்ரகாசம்
தத் அவரணம் அமோகம் ஜ்ஞாநம் ஆம்நாஸிஷு: தே

பொருள் – (எம்பெருமான் அனைத்தையும் ஒரே நேரத்தில் நோக்கியபடி உள்ளது என்பது அவனது ஞானம் என்பதாகும். இதனை விவரிக்கிறார்) ஸ்ரீரங்கராஜனே! உன்னுடைய இந்த்ரியங்களாலும், இந்த்ரியங்களால் அல்லாமல் தேவர்கள் முதலானவர்கள் மூலமாகவும், அந்தந்த இந்த்ரியங்கள் மூலம் அவற்றுக்கான விஷயங்களை அறிந்து கொண்டும் (கண் மூலம் காண்பது, காது மூலம் கேட்பது – இதன் விளக்கத்தை அடுத்த ச்லோகத்தின் விளக்கத்தில் காண்க), அந்தந்த இந்த்ரியங்கள் மூலம் அவற்றுக்கான விஷயங்கள் அல்லாமல் மற்ற இந்த்ரிய விஷயங்களை அறிந்து கொண்டும் (கண்ணால் கேட்பது, காதால் பார்ப்பது) – இப்படியாக அனைத்து உலகங்களில் உள்ள அனைத்துப் பொருள்களையும், ஒரே நேரத்தில் உனது உள்ளங்கையைக் காண்பது போன்று மிகவும் எளிதாகக் காண்கிறாய். இப்படியாக உனது அறிதல் என்பது தானாகவே ப்ரகாஸிக்கவல்லது, உண்மையாக உள்ளது, குறைகள் அற்றது ஆகும். இப்படியாகவே உள்ள இந்த அறிதல் என்பதை வேதங்கள் உனது ஞானம் என்றே முழங்கின.

29. நயந ச்ரவணா: த்ருசா ச்ருணோஷி அத தே ரங்கபதே மஹேசிது:
கரணை: அபி காமகாரிணா: கடதே ஸர்வபதீநம் ஈக்ஷணம்

பொருள் – ஸ்ரீரங்கநாதா! கண்கள் என்னும் காதுகளைக் கொண்ட நீ, உனது திருக்கண்கள் மூலமாகவே அனைத்தையும் கேட்கும் வலிமை கொண்டுள்ளாய். இப்படியாக உனது ஒவ்வொரு இந்த்ரியங்களின் செயல்களையும் உனது விருப்பப்படிசெயல் புரிய வைக்கிறாய். ஆக மிகவும் உயர்ந்த ஸர்வேச்வரனான உனக்கு அனைத்தையும் எப்போதும் அறிந்தபடி இருத்தல் என்பது கூடாமல் இருக்குமோ?

விளக்கம் – கண்களால் காண்பது, காதுகளால் கேட்பது என, அந்தந்த இந்த்ரியங்களின் செயல்பாடுகளில் உள்ள கட்டுப்பாடு, நம்மைப் போன்ற மனிதர்கள், விலங்குகள் ஆகிய ஜீவராசிகளுக்கு மட்டுமே பொருந்தும். ஆனால் ஸர்வேச்வரனுக்கு அப்படி அல்ல. அவனால் கண்களால் கேட்க இயலும், காதுகளால் பார்க்க இயலும். இதனைப் புகழ்கிறார்.

30. ஸார்வஜ்ஞ்யேந அஜ்ஞ மூலம் ஜகத் அபிதததத: வாரிதா: ஸாக்ஷிமாத்ராத்
ஸாங்க்ய உக்தாத் காரணம் த்வாம் பரயதி பகவந் ஐச்வரீ ரங்கசாயிந்
அப்ரேர்ய: அந்யை: ஸ்வதந்த்ர: அப்ரதிஹதி ஸத்அஸத் கர்ம சைத்ர்யா விசித்ரம்
யத்ர இச்சாலேசத: த்வம் யுகபத் அகணயந் விச்வம் ஆவிச் சகர்த்த

பொருள் – திருவரங்கத்தில் கண்வளரும் அழகியமணவாளா! இந்த உலகமானது அசேதனமாக உள்ள ப்ரக்ருதி கொண்டு படைக்கப்பட்டது என்று சிலர் கூறுவார்கள். அவர்கள், உன்னுடைய “அனைத்தும் அறிந்தவன் (ஸர்வஜ்ஞன்)” என்ற மேன்மையால் தள்ளப்பட்டனர். மற்றவர்களுக்கு வசப்படாமல், சுதந்திரமானவனாக, புண்யபாப கர்மங்களின் பிரிவைக் கொண்டு, விசித்ரமான பலவற்றையும் நீ உனது ஸங்கல்பம் மட்டுமே கொண்டு, ஒரு லீலையாகவே, ஒரே நேரத்தில், எந்தவிதமான இடையூறுகளும் இன்றிப் படைத்தாய். இப்படிப்பட்ட உனது லீலைக்கு உதவும் உனது ஐச்வர்ய குணம் செய்வது என்ன என்றால் – இந்த உலகிற்கு அனைத்து வகையிலும் காரணமாக உள்ள உன்னை, ஸாங்யர்கள் கூறுகின்ற ஸாக்ஷிமாத்ரமான புருஷனிடமிருந்து வேறுபடுத்திக் காண்பிக்கிறது.

ஸ்ரீபராசரபட்டர் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

பகவத் ராமானுஜர் அருளிச் செய்த

## ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 16)

**சந்தேகம்** - ப்ருஹத் உபநிஷத்தில் (வாஜஸநேயகம்) படிக்கப்பட்ட உத்கீத வித்யையும், சாந்தோக்ய உபநிஷத்தில் படிக்கப்பட்ட உத்கீத வித்யையும் ஒன்றா? அல்லது வெவ்வேறா? எது சரி?

**பூர்வபக்ஷம்** – இரண்டு உபநிஷத்துக்களில் படிக்கப்பட்ட உத்கீத வித்யை என்பது ஒன்றே ஆகும். ஏன்? இரண்டிலும் உத்கீதத்தில் முக்யப்ராணன் என்னும் எண்ணத்தை ஏறிட்டுக் கொண்டே உபாஸிக்கவேண்டும் என்று கூறப்பட்டது. இதனால் இரண்டிலும் உள்ள சோதநா என்னும் விதியானது ஒன்றே என ஆகிறது. சத்ருக்களை அழிப்பது என்பதாகிய பலனும் இரண்டிலும் ஒன்றாகவே உள்ளது. ரூபத்திலும் இரண்டிற்கும் வேறுபாடு இல்லை – காரணம், இரண்டுமே ப்ராணனை ஏறிட்டு உபாஸிக்கவேண்டும் என்றே கூறுகின்றன. ஆக்யா என்று கூறப்படும் பெயரும் "உத்கீதம்" என்று இரண்டிலும் ஒன்றாகவே உள்ளது. ஆகவே இங்கு வித்யைகளின் ஐக்யமே (இரண்டும் ஒன்றே) உள்ளது.

**பூர்வபக்ஷியின் கருத்து** (இந்தப் பத்தியானது மேலே உள்ள பூர்வபக்ஷத்தை மறுப்பது போன்று உள்ளதால், இது ஸித்தாந்தமோ என்ற எண்ணம் ஏற்படும். ஆனால் இந்தப் பகுதி ஸித்தாந்தம் அல்ல. மேலே கூறப்பட்ட தனது கருத்துக்கு, ஸித்தாந்தி என்ன பதில் அளிப்பான் என்று பூர்வபக்ஷி யூகம் செய்து, ஸித்தாந்தி இவ்விதமாகக் கூறுவான் என்று எண்ணுகிறான். அதனைத் தானே கூறி, "இது போன்று நீங்கள் (ஸித்தாந்தி) வாதம் செய்வது சரியல்ல", என்று மறுத்து, தனது பூர்வபக்ஷத்தை மேலும் உறுதிபடக் கூறுகிறான்). நீர் (பூர்வபக்ஷி) கூறிய வித்யை ஐக்யம் என்பதை ஏற்க இயலாது – காரணம் ரூபத்தில் பேதம் உள்ளது. அதாவது, வெவ்வேறு சப்தங்கள் அங்கு காணப்படுகின்றன. இதனை விளக்குவோம்.

ப்ருஹத் உபநிஷத்தில் (வாஜஸநேயகம்) – அத ஹ இமம் ஆஸந்யம் ப்ராணம் ஊசு: த்வம் ந: உத்காய; ததா இதி தேப்ய: ஏஷ: ப்ராண: உதகாயத் – தேவர்கள் முக்யப்ராணனிடம், " நீ எங்களின் பொருட்டு உத்கீதத்தை இசைப்பாயாக",

என்றனர். உடனே ப்ராணன், “அப்படியே செய்கிறேன்”, எனக் கூறி, உத்கீத கானம் செய்தது – என்று கூறப்பட்டது. இதே வரியில் – ய ஏவம் வேத – இதனை அறிந்தவன் – என்று உள்ளது. இங்கு காணப்படும் ஏவம் என்ற பதம் மூலம், உத்கீதத்தை கர்த்தாவின் மீது ஏற்றிக் கூறுவதாக, அதாவது உத்கீதம் செய்யும் உத்காதாவிடம் ப்ராணன் என்ற எண்ணத்தை ஏற்றிக் கூறுவதாக உள்ளது. ஆக இங்கு பாடுபவனை ப்ராணன் என்று கொண்டு, அவனைத் த்யானிப்பதாகக் கூறப்பட்டது.

சாந்தோக்ய உபநிஷத்தில் ப்ராணனை ஏற்றிக் கூறி, உத்கீதம் மூலம் அசுரர்கள் வெல்லப்பட்டதை விளக்கி, அதனைத் தொடர்ந்து - அதஹ ய ஏவ அயம் முக்ய ப்ராண: தம் உத்கீதம் உபாஸாம் சக்ரிரே - அதன் பின்னர் முக்யப்ராணனை உபாஸித்தனர் - என்று உள்ளது. மேலும் (1-2-8) - ய ஏவம் விதி பாபம் காமயதே – என்பதில் உள்ள ஏவம் என்ற பதம் மூலம், ப்ராணனை உத்கீதம் மீது ஏற்றிக் கூறினர். ஆக இரண்டிலும் வேறுபாடு உள்ளது. ஒன்றில் உத்கீத கர்த்தா மீதும், மற்றொன்றில் உத்கீத கர்மம் மீதும் ப்ராணன் ஏற்றிக் கூறப்பட்டது. ஆக இங்கு ரூபம் வேறுபடுவதால், வித்யை பேதம் உண்டாகிறது. வித்யைபேதம் ஏற்பட்ட பின்னர், சோதநா என்ற விதிகளால் எந்த ஒற்றுமையும் ஏற்படாது. ஆகவே வித்யைகளில் வேறுபாடு உள்ளது.

**பூர்வபக்ஷம்** – இவ்விதம் கூறுவது சரியல்ல. இரண்டிலும் தொடக்கத்தில் அசுரர்களை (விரோதிகளை) அழிப்பது என்பதே முக்கிய குறிக்கோளாகக் கூறப்பட்டுள்ளது; உத்கீதம் கொண்டு அழிப்பதாகக் கூறப்பட்டுள்ளது. வாஜஸநேயகத்தில் (ப்ருஹத் உபநிஷத் 9-3-1) – தே ஹ தேவா ஊசு ஹந்த அஸுராந் யஜ்ஞே உத்கீதேந - யஜ்ஞத்தில் உத்கீதத்தின் மூலம் நாம் வெற்றி கொள்வோம் - என்று கூறப்பட்டது. சாந்தோக்யத்தில் (1-2-10) – தத்த தேவா உத்கீதம் ஆஜஹ்ரு: அநேநைவ ஏநாந் அபிஹ நிஷ்யாம: - தேவர்கள் யுத்தத்தின் போது, ”இந்த உத்கீதத்தைக் கொண்டு அசுரர்களைக் கொல்வோம்”, என்று கூறினர் – என்று கூறப்பட்டது. எனவே தொடக்க வரிகளுக்கும், பின்னால் உள்ள ப்ருஹத் உபநிஷத் (1-3-7) – தேப்ய: ஏஷ ப்ராண உதகாயத் – இவர்களுக்காகப் ப்ராணன் உத்கீதம் இசைத்தது – என்னும் வரிகளுக்கும் இடையே முரண்பாடு ஏற்படாமல் இருக்கும் பொருட்டு, உத்கீதமே இசைக்கப்படும் வஸ்துவாக இருந்தபோதிலும், அதுவே இங்கு கர்த்தாவாகவும் கூறப்பட்டது. உணவே சமைக்கிறது - என்று அரிசியையே கர்த்தாவாகக் கூறுவது போன்று, உத்கீதத்தின் விஷயமாக உள்ள உத்கீதத்திற்கு, அப்படிப்பட்ட உத்கீதம் மூலம் ஏற்படும் ஸௌகர்யம் கருதி, உத்கீதமே கர்த்தா என்னும் கூறப்பட்டது. இப்படிக்

கொள்ளவில்லை என்றால், முன்னுரையில் படிக்கப்பட்ட உத்கீதம் என்ற பதமானது கர்த்தாவின் லக்ஷணம் என்று மட்டுமே கூறப்பட்டதான முரண்பாடு உண்டாகும். ஆகவே, இரண்டு வித்யைகளும் ஒன்றே ஆகும்.

**ஸித்தாந்தம்** - இந்த பூர்வபக்ஷத்திற்கான பதிலை நாம் அளிக்கிறோம் (அடுத்த சூத்திரம் காண்க).

3-3-7 ந வா ப்ரகரண பேதாத் பரோவரீயஸ்த்வாதிவத்

**பொருள்** - மேலே உள்ள வாதம் தவறானது. இரண்டிலும் ப்ரகரணம் (context) வேறுபட்டுள்ளது. குணத்தில் வேறுபாடு கூறுவது போன்று.

**ஸித்தாந்தம்** – (கடந்த சூத்திரத்தில் உள்ள ஸித்தாந்தம் தொடர்கிறது) சூத்திரத்தில் உள்ள - ந வா - என்ற பதங்கள், பூர்வபக்ஷத்தைத் தள்ளுகிறது. வித்யையில் ஏற்றுமை இல்லை என்றே கூற வேண்டும். ஏன்? ப்ரகரணத்தில் பேதம் (contextual difference) உள்ளதால் ஆகும். சாந்தோக்யத்தில் (1-1-1) ஓம் இதி ஏதத் அக்ஷரம் உத்கீதம் உபாஸந – உத்கீதத்தின் அவயவயமாக உள்ள ஓம் என்னும் அக்ஷரத்தை உபாஸிப்பானாக – என்று உத்கீதத்தின் அவயவமான ப்ரணவம் (ஓம்) குறித்த உபாஸனை தொடங்கப்பட்டது. சாந்தோக்யத்தில் (1-1-10) – தேவாஸுராஹவை யத்ர ஸம்யேதிரே - தேவர்களும் அசுரர்களும் எப்போது யுத்தம் செய்யத் தொடங்கினார்களோ - என்று தொடங்கப்பட்டு, (1-2-7) - அதஹ ய ஏவாயம் முக்யப்ராண: தம் உபாஸாம் சக்ரிரே - அப்போது தேவர்கள் முக்யப்ராணனை உபாஸனம் செய்தனர் - என்று கூறி, உத்கீதத்தின் அவயவமான ப்ரணவ உபாஸனம் கூறப்பட்டது.

ஆனால் வாஜஸநேயகத்தில் (ப்ருஹத்) இவ்விதமாகத் தொடங்கும் அத்யாயம் ஏதும் இல்லை. அவர்கள் (ப்ருஹத் உபநிஷத் : 1-3-1) – ஹந்த அஸுராந் உத்கீதேந அத்யயாம: - ஆஹா! நாம் அசுரர்களை உத்கீதம் கொண்டு அழித்துவிடுவோம் – என்று அனைத்து உத்கீதங்களிலும் கூறுகின்றனர். இதன் பின்னர் (1-3-7) – அத ஹ ஏஷம் ஆஸந்யம் ப்ராணமூசு: த்வம் ந உத்காய – தங்கள் வாயில் உள்ள

ப்ராணனிடம், "எங்களுக்காக உத்கீதம் இசைப்பாயாக", என்றனர் – என்று, உத்கீதத்தை முழுமையாக்க் கூறினர். இப்படியாக இரண்டிலும் ப்ரகரணபேதம் உள்ளது. இதனால் விஷயபேதமும், ரூபபேதமும் உண்டாகிறது (ப்ருஹத் உபநிஷத்தில், உத்கீதத்தை இசைக்கும் கர்த்தாவிடத்தில் ப்ராணன் என்ற எண்ணம் ஏறிட்டுக் கூறப்பட்டது; சாந்தோக்யத்தில், உத்கீதத்தின் அவயவமான ப்ரணவத்தில் ப்ராணன் என்ற எண்ணம் ஏறிட்டுக் கூறப்பட்டது). ஆகவே இரண்டு வித்யைகளும் ஒன்றல்ல.

சாந்தோக்யத்தில் உத்கீதத்தின் அவயவமான ப்ரணவத்தில் ப்ராணன் ஏற்றிக் கூறப்பட்டு, அதுவே உபாஸனையும் செய்யப்படுகிறது. இந்த வரியானது (1-2-7) - அத ய ஏவாயம் முக்யப்ராண: தம் உத்கீதம் உபாஸாஞ்சக்ரீரே - உத்கீத அவயவமான முக்யப்ராணனை உபாஸனை செய்தனர் – என்பதாகும். ஆனால் வாஜஸநேயிகளுக்கு உத்கீதத்தின் கர்த்தாவாக உள்ளவன் மீது ப்ராணன் ஏற்றிக் கூறப்பட்டு, அவனைக் குறித்து உபாஸனம் கூறப்பட்டது. உத்கீத கர்த்தாவின் மீது ப்ராணன் ஏற்றிக் கூறப்படுவதை ப்ருஹத் உபநிஷத் (1-3-7) - அத ஹ இமம் ப்ராணம் ஊசு: தவம் ந உத்காய இதி ததா இதி தேப்ய: ஏஷ: ப்ராண உதகாயத் – அதன் பின்னர் அவர்கள் ப்ராணனிடம், "நீ எங்களுக்காக உத்கீதம் இசைப்பாயாக", என்றனர்; இதனை ஏற்ற ப்ராணனும், அப்படியே செய்தது – என்ற வரி மூலம் அறியலாம். இதனைத் தொடர்ந்து (1-3-7) – ய ஏவம் வேத - என்பதன் மூலம், அத்தகைய உத்கீத கர்த்தா மீது ப்ராணனை ஏற்றிக் கூறி உபாஸானை செய்ய வேண்டும் என்று கூறியது. ஆக, இரண்டிற்கும் ரூபபேதம் உள்ளது.

இப்படிக் கொண்டால் ப்ருஹத் உபநிஷத் (1-3-1) – உத்கீதேந அத்யயாம: - உத்கீதம் மூலம் அசுரர்களை அழிப்போம் - என்ற தொடக்க சபதத்திற்கு முரண்பாடு உண்டாகும் அல்லவோ என்னும் சந்தேகம் எழலாம். இந்தச் சந்தேகம் அவசியம் அற்றது. உத்கீத கர்த்தாவை உபாஸிக்கும்போது, அங்கு அவனால் இசைக்கப்படும் உத்கீதமும், அங்கு நிச்சயம் இருக்கும். அப்படிப்பட்ட உத்கீதமே கர்மமாகி, அதற்குரிய பலனாகிய - அசுரர்களை வெல்லுதல் – என்பதை அளிக்கப்போகிறது. எனவே ரூபத்தில் பேதம் உள்ளது என்பதை ஏற்றாகவேண்டும். இதனால் வித்யைபேதமும் உள்ளது என்றாகிறது. ஆகவே விதி, பெயர் போன்றவை ஒன்று என்பதால் இந்த வித்யைகளும் ஒன்றே எனக் கொள்ள இயலாது.

பரோவரீயஸ்த்வாதிவத் – ஒரே சாகையைச் சேர்த்த இரண்டு இடங்களில் (இதற்கான விளக்கம் கீழே உள்ளது), ப்ரணவத்தில் பரமாத்மா என்ற எண்ணத்தை ஏறிட்டுக் கொண்டு உபாஸிப்பது பொதுவாக இருந்தாலும், ஓர் இடத்தில் பொன்மயமான திருமேனியுடன் உள்ள பரமாத்மா என்றும், மற்றோர் இடத்தில் உயர்ந்த குணங்களுடன் கூடிய பரமாத்மா என்றும், வேறுவேறு விதமாக

உபாஸிக்கும்படிக் கூறியது காண்க. இதனால் இந்த உபாஸனங்கள் ஒன்றல்ல என்றே தேறுகிறது. இதே போன்று இங்கும் வித்யாபேதத்தைப் பற்றிய சந்தேகம் எழுவதற்கு வாய்ப்பே இல்லை.

**குறிப்பு** (கடந்த பத்தியில் உள்ள பரமாத்மா உபாஸனை என்பது என்ன? இதனை விளக்குவோம். இந்தக் குறிப்பானது ஸ்ரீபாஷ்யத்தில் இல்லை. விவரிப்பதற்காகச் சேர்க்கப்பட்டது) சாந்தோக்யத்தின் தொடக்கத்தில் உத்கீதத்தின் அவயவமான ப்ரணவத்தில், பரமாத்மா என்ற எண்ணத்தை ஏறிட்டு உபாஸிக்கும்படி கூறப்படும் வரிகள் உள்ளன. இவையாவன:

- (1-6-6) - ய ஏஷோ அந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே – பொன்மயமான புருஷனாகிய பரமாத்மா ஆதித்யனின் நடுவில் உள்ளான்.
- (1-9-2) - ஸ ஏஷ பரோவரீயாந் உத்கீத: - சிறந்த குணம் கொண்டவர்களுள் சிறந்தவனாக உள்ளவன்

ஆக இரண்டு விதமாக – பொன்மயமான பரமாத்மா, உயர்ந்த குணங்களுடன் உள்ள பரமாத்மா என்று இரு விதமான உபாஸனை கூறப்பட்டது காண்க. இதுவே கடந்த பத்தியில் கூறப்பட்டது.

தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 16)

## ப்ரம்மன், ருத்ரன் போன்றோர் நாராயணனை ஆராதித்தே தங்கள் பதவிகளை அடைந்தவர்கள்

இவர்கள் கர்மவச்யராய்ச் சில கர்மவிசேஷங்களாலே ஸர்வேச்வரனை ஆராதித்துத் தத்தம் பதங்கள் பெற்றார்களென்னுமிடம்

ஸர்வே தேவா வாஸுதேவம் யஜந்தே ஸர்வே தேவா வாஸுதேவம் நமந்தே

ஸப்ரஹ்மகாஸ்ஸருத்ராச்ச ஸேந்த்ர தேவா மஹர்ஷய:
அர்ச்சயந்தி ஸுரச்ரேஷ்டம் தேவம் நாராயணம் ஹரிம்

சிந்தயந்தோ ஹி யம் நித்யம் ப்ரஹ்மே சாநாதய: ப்ரபும்
நிச்சயம் நாதிகச்சந்தி தமஸ்மி சரணம் கத:

பத்மே திவ்யே அர்க்கஸங்காசே நாப்யாமுத்பாத்ய மாமபி
ப்ராஜாபத்யம் த்வயா கர்ம ஸர்வம் மயி நிவேசிதம்
ஸோ அஹம் ஸந்ந்யஸ்த பாரோ ஹி த்வாமுபாஸே ஜகத்பதிம்

யுககோடி ஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூ:
புனஸ்த்ரைலோக்ய தாத்ருத்வம் ப்ராப்தவாநித சுச்ரும

விச்வரூபோ மஹாதேவ: ஸர்வமேதே மஹாக்ரதௌ
ஜுஹாவ ஸர்வபூதாநி ஸ்வயமாத்மாநமாத்மநா

மஹாதேவ: ஸர்வமேதே மஹாத்மா ஹ்ருத்வா ஆத்மாநம் தேவதேவோ ப்பூவ
விச்வாந் லோகாந் வ்யாப்ய விஷ்டப்ய கீர்த்யா விராஜதே துதிமாந் க்ருத்திவாஸா:

யோ மே யதா கல்பிதவாந் பாகமஸ்மிந் மஹாக்ரதௌ
ஸ ததா யஜ்ஞபாகர்ஹோ வேதஸூத்ரே மயா க்ருத:

இத்யாதிகளிலே ப்ரஸித்தம்.

**விளக்கம்** – ப்ரம்மன், ருத்ரன் முதலானோர் கர்மவசப்பட்டவர்களே ஆவார்கள். இவர்கள் ஸர்வேச்வரனான ஸ்ரீமந் நாராயணனை ஆராதனை செய்வதன் மூலமே தங்களது பதவிகளை அடைகின்றனர் என்பதைக் கீழே உள்ள பல வரிகளின் மூலம் அறியலாம்:

- ஸர்வே தேவா வாஸுதேவம் யஜந்தே ஸர்வே தேவா வாஸுதேவம் நமந்தே – வாஸுதேவனையே அனைத்து தேவர்களும் ஆராதனை செய்கின்றனர்; வாஸுதேவனையே அனைத்து தேவர்களும் வணங்குகின்றனர்;

- மஹாபாரதம் சாந்தி பர்வம் (350-30) - ஸப்ரஹ்மகாஸ்ஸருத்ராச்ச ஸேந்த்ர தேவா மஹர்ஷய: அர்ச்சயந்தி ஸுரச்ரேஷ்டம் தேவம் நாராயணம் ஹரிம் – ப்ரம்மன், ருத்ரன், இந்த்ரன், தேவர்கள், அனைத்து முனிவர்கள் ஆகியோர் தேவர்களுக்குத் தேவனாக உள்ள ஸ்ரீஹரியாகிய நாராயணனையே ஆராதனை செய்தபடி உள்ளனர்.

- மஹாபாரதம் சாந்தி பர்வம் (210-33) - சிந்தயந்தோ ஹி யம் நித்யம் ப்ரஹ்மே சாநாதய: ப்ரபும் நிச்சயம் நாதிகச்சந்தி தமஸ்மி சரணம் கத: - ப்ரம்மன், ருத்ரன் முதலானோர் நாராயணனை எப்போதும் ஆராதனை செய்தபடி உள்ளபோதிலும், அவனது தன்மை இத்தகையது என்பதை இன்னமும் அறியாமலேயே உள்ளனர்; இப்படிப்பட்ட நாராயணனை நான் வணங்குகிறேன்.

- இராமாயணம் உத்தரகாண்டம் (104-7, 8) - பத்மே திவ்யே அர்க்கஸங்காசே நாப்யா முத்பாத்ய மாமபி ப்ராஜாபத்யம் த்வயா கர்ம ஸர்வம் மயி நிவேசிதம் ஸோ அஹம் ஸந்ந்யஸ்த பாரோ ஹி த்வாமுபாஸே ஜகத்பதிம் – ப்ரம்மன் கூறுவது, "உனது திருநாபியில், சூர்யன் போன்ற பிரகாசத்துடன் உண்டான தாமரையில், என்னை உண்டாக்கினாய்; ப்ரஜாபதி என்பவர் செய்யவேண்டிய அனைத்துக் கடமைகளையும்

என்னிடம் வைத்தாய்; இப்படியாக பெரும் பாரத்தைக் கொண்டவனாகிய நான், அனைத்து உலகின் பதியாக உள்ள உன்னை வணங்குகிறேன்.

- மஹாபாரதம் - யுககோடி ஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூ: புனஸ்த்ரைலோக்ய தாத்ருத்வம் ப்ராப்தவாநித சுச்ரும – தாமரையில் அமர்ந்துள்ளவனான ப்ரம்மன், ஆயிரம் கோடி யுகங்கள் நாராயணனை ஆராதனை செய்து, மூன்று உலகங்களையும் படைக்கும் திறமையைப் பெற்றான் என்பதை நாம் கேள்விப்பட்டுள்ளோம்.

- மஹாபாரதம் சாந்தி பர்வம் (8-37) - விச்வரூபோ மஹாதேவ: ஸர்வமேதே மஹாக்ரதௌ ஜுஹாவ ஸர்வபூதாநி ஸ்வயமாத்மாநமாத்மநா – விச்வரூபன் என்னும் பெயர் கொண்ட ருத்ரன், ஸர்வமேதம் என்னும்படியான யாகத்தில் அனைத்துப் பூதங்களையும், தன்னையும் மனதால் அர்ப்பணித்தான்.

- மஹாபாரதம் சாந்தி பர்வம் (20-12) - மஹாதேவ: ஸர்வமேதே மஹாத்மா ஹ்ருத்வா ஆத்மாநம் தேவதேவோ பபூவ விச்வாந் லோகாந் வ்யாப்ய விஷ்டப்ய கீர்த்யா விராஜதே துதிமாந் க்ருத்திவாஸா: - ஸர்வமேதம் என்னும் யாகத்தில் மஹாதேவன் என்னும் ருத்ரன் தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொண்டு, தேவர்களில் உயர்ந்தவன் என்னும் பெயர் அடைந்தான்; இதன் மூலம், யானையின் தோலைத் தனது உடையாகக் கொண்ட அவன், தனது ஞானம் மூலம் அனைத்து உலகங்களையும் வ்யாபித்து நின்றான்; எட்டுவிதமான மூர்த்திகளைத் தாங்கியபடி உள்ளான்.

- மஹாபாரதம் சாந்தி பர்வம் (349-61) - யோ மே யதா கல்பிதவாந் பாகமஸ்மிந் மஹாக்ரதௌ ஸ ததா யஜ்ஞபாகர்ஹோ வேதஸூத்ரே மயா க்ருத: - இத்தகைய பெரிய யாகத்தில், எனக்கு அளிக்கப்பட வேண்டிய அவிர்பாகத்தை யார் ஒருவன் முறைப்படி அளித்தானோ, அவன் தனக்கு உரிமையான யஜ்ஞ பாகத்தைப் பெறும் உரிமை உடையவன் ஆகிறான்; இதனை நான் வேதங்களிலும், ஆபஸ்தம்ப ஸூத்ரத்திலும் கூறியுள்ளேன்.

## ப்ரம்மன், ருத்ரன் போன்றோர் நாராயணனின் மாயைக்கு உட்பட்டவர்களே

இவர்கள் பகவந்மாயா பரதந்த்ர்ராய் குணவச்யராய் ஞானஸங்கோச விகாஸவான்களாயி ருப்பார்களென்னுமிடம் வேதாபஹாராதி வ்ருத்தாந் தங்களிலும்,

ப்ரஹ்மாத்யாஸ்ஸகலா தேவா மனுஷ்யா: பசவஸ்ததா
விஷ்ணுமாயா மஹாவர்த்த மோஹாந்த தமஸாவ்ருதா:

ப்ரஹ்மா விச்வஸ்ருஜோ தர்மா மஹாந் அவ்யக்தமேவ ச
உத்தமாம் ஸாத்த்விகீமேதாம் கதிமாஹுர்மநீஷிணா:

இத்யாதிகளிலும் ப்ரஸித்தம்.

**விளக்கம்** – ப்ரம்மன், ருத்ரன் முதலானோர் நாராயணனின் மாயைக்கு வசப்பட்டவர்கள், மூன்று குணங்களின் வசப்பட்டவர்கள், இவர்களின் ஞானமானது விரிவதும் சுருங்குவதுமாகவே உள்ளது. இவை அனைத்தையும் வேதங்களைப் ப்ரம்மன் தொலைத்த நிகழ்வு மூலமும், கீழே உள்ள வரிகளின் மூலமும் அறியலாம்:

- விஷ்ணு புராணம் - ப்ரஹ்மாத்யாஸ்ஸகலா தேவா மனுஷ்யா: பசவஸ்ததா விஷ்ணுமாயா மஹாவர்த்த மோஹாந்த தமஸாவ்ருதா: - ப்ரம்மன் உள்ளிட்ட தேவர்கள், மனிதர்கள், விலங்குகள் ஆகிய அனைத்தும் விஷ்ணுவின் மாயை எனப்படும் இருளால் சூழப்பட்டே உள்ளனர்.

- மநு ஸ்ம்ருதி (12-50) - ப்ரஹ்மா விச்வஸ்ருஜோ தர்மா மஹாந் அவ்யக்தமேவ ச உத்தமாம் ஸாத்த்விகீமேதாம் கதிமாஹுர்மநீஷிணா: - கடந்த பிறவியில் ஸத்வ குணம் மேலோங்கி நிற்க, பல புண்ணியங்களைச் சிலர் செய்கின்றனர்; இவர்களால் ப்ரம்மன், ஒன்பது ப்ரஜாபதிகள், தர்மதேவதை, மஹத் தேவதை, அவ்யக்த தேவதை என்னும் உயர்ந்த பிறவிகள் எடுக்கப்படுகின்றன.

## ப்ரம்மன், ருத்ரன் போன்றோர் நாராயணனிடமிருந்தே ஞானம் பெறுபவர்கள்

இவர்கள் தங்களுக்கு அந்தராத்மாவான அவன் கொடுத்த ஞானாதிகளைக் கொண்டு அவனுக்கு ஏவல் தேவை செய்கிறார்களென்னுமிடம்

ஏதௌ விபுதச்ரேஷ்டௌ ப்ரஸாத க்ரோதஜௌ ஸ்ம்ருதௌ
ததாதர்சித பந்தாநௌ ஸ்ருஷ்டி ஸம்ஹார காரகௌ

என்று சொல்லப்பட்டது.

**விளக்கம்** – ப்ரம்மன் முதலானோர் தங்களுக்கு அந்தர்யாமியாக உள்ள ஸ்ரீமந் நாராயணன் அளித்த ஞானத்தைக் கைக்கொள்கின்றனர். அந்த ஞானம் மூலமே, அவனுக்கு ஏற்ற பணிவிடைகளைச் செய்தபடி உள்ளனர். இதனை மஹாபாரதம் சாந்திபர்வம் (350-19) - ஏதௌ விபுதச்ரேஷ்டௌ ப்ரஸாத க்ரோதஜௌ ஸ்ம்ருதௌ ததாதர்சித பந்தாநௌ ஸ்ருஷ்டி ஸம்ஹார காரகௌ – எம்பெருமானின் மகிழ்வாலும், கோபத்தாலும் தோன்றியவர்களான தேவர்களில் உயர்ந்தவர்கள் (ப்ரம்மன், சிவன்), அவன் கொடுத்த அறிவு மூலம் ஸ்ருஷ்டியையும், அழித்தலையும் செய்தபடி உள்ளனர் – என்று கூறியது.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

# முமுக்ஷுப்படி

## ஸ்ரீமணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்

(பகுதி – 16)

86 “ம:” என்கை ஸ்வரூபநாசம், ”நம” என்கை ஸ்வரூபோஜ்ஜீவநம்.

அவதாரிகை – இப்படி ஸ்வரூபோபாய புருஷார்த்தங்கள் மூன்றுக்கும் விரோதியாகிறது இவனுடைய அஹங்கார மமகாரங்களாகையாலே. அதினுடைய க்ரௌர்யத்தையும் தந்நிவ்ருத்தியிலுண்டான நன்மையையும் அருளிச்செய்கிறார் - “ம:” என்கை ஸ்வரூபநாசம், ”நம” என்கை ஸ்வரூபோஜ்ஜீவநம் – என்று.

விளக்கம் – இப்படியாக, ஜீவன் ஸர்வேச்வரனுக்கு மட்டுமே அடிமை என்றுள்ள ஜீவனின் ஸ்வரூபம், ஸர்வேச்வரனை மட்டுமே சரணம் என்று கொண்டுள்ள உபாயம், ஸர்வேச்வரனுக்கு மட்டுமே கைங்கர்யம் செய்கின்ற புருஷார்த்தம் என்ற இந்த மூன்றுக்கும் விரோதியாக இருப்பவை - ஜீவனின் அஹங்காரம் மற்றும் மமகாரம் ஆகும். இவற்றின் தீய தன்மையையும், இந்த எண்ணங்கள் விலகினால் உண்டாக்ககூடிய நன்மையையும் அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, சேதநஸ்ய யதா மம்யம் ஸ்வஸ்மிந் ஸ்வீயே ச வஸ்துநி மம இத்யக்ஷரத்வந்த்வம் ததா மம்யஸ்ய வாசகம் என்கிறபடி, ம: என்கிற இதிலே அஹங்கார மமகாரங்கள் இரண்டுமுண்டாகையாலே அதிலே அந்விதனாகை – இவ்வாத்மா வினுடைய ஸ்வரூபத்துக்கு நாசம்; நம என்ற அதில் அந்வயமற்றிருக்கை – ஸ்வரூபத்திற்கு உஜ்ஜீவநம் – என்கை. த்வ்யக்ஷரஸ்து பவேந் ம்ருதயுஸ் த்ர்யக்ஷரம் ப்ரஹ்மண: பதம் மமேதி த்வ்யக்ஷரோ ம்ருத்யுர் ந மமேதி ச சாஸ்வதம் என்னக்கடவதிறே.

விளக்கம் - அஹிர்புத்ய ஸம்ஹிதை - சேதநஸ்ய யதா மம்யம் ஸ்வஸ்மிந் ஸ்வீயே ச வஸ்துநி மம இத்யக்ஷரத்வந்த்வம் ததா மம்யஸ்ய வாசகம் - தன்னைக் குறித்தும், தன்னிடம் உள்ள பொருள்களைக் குறித்தும், "என்னுடையது" என்ற எண்ணம் உண்டாகும்போது மம என்னும் பதங்கள் மமகாரத்தைக் குறிக்கிறது - என்று கூறியது. இதன் மூலம் ம: என்ற பதத்தில், அஹங்காரம் மற்றும் மமகாரம் ஆகிய இரண்டுமே அடக்கம் என்பது தெளிவாகிறது. அதில் ஈடுபட்டுள்ள ஜீவனின் ஸ்வரூபமானது, நாசம் அடைகிறது. நம: என்ற பதமானது, அஹங்காரம் மற்றும் மமகாரம் ஆகியவற்றின் தொடர்புகளை விளக்கி, ஜீவனின் ஸ்வரூபத்தைக் காக்க வல்லது ஆகும். மஹாபாரதம் – த்வ்யக்ஷரஸ்து பவேந் ம்ருதயுஸ் த்ர்யக்ஷரம் ப்ரஹ்மண: பதம் மமேதி த்வ்யக்ஷரோ ம்ருத்யுர் ந மமேதி ச சாஸ்வதம் – இரண்டு அக்ஷரங்கள் (மம) ஆத்மாவிற்கு எமன் போன்றது; மூன்று அஷரங்கள் ப்ரஹ்மத்தின் இருப்பிடத்தை அளிப்பது, மூன்று அக்ஷரங்கள் "ந மம" என்று கூறியது.

87. இதுதான் - ஸ்வரூபத்தையும், உபாயத்தையும், பலத்தையும் காட்டும்.

அவதாரிகை - இப்படி ஸ்வரூப உபாய புருஷார்த்த விரோதிகளைக் கழிக்கிற அளவன்றிக்கே, இந்நமஸ்ஸுதான் ஸ்வரூபாதி த்ரயத்தையும் ப்ரகாஸிப்பிக்கும் என்கிறார் - இதுதான் ஸ்வரூபத்தையும், உபாயத்தையும், பலத்தையும் காட்டும் - என்று.

விளக்கம் - ஸ்வரூபம், உபாயம் மற்றும் புருஷார்த்தம் ஆகிய மூன்றின் விரோதிகள் அழிவது மட்டுமே போதாது. நம: என்னும் பதம், இந்த மூன்றையும் மேலும் ப்ரகாசப்படுத்தவல்லது என்று அருளிச்செய்கிறார்.

88. "தொலைவில்லி மங்கலந் தொழும்" என்கையாலே, ஸ்வரூபம் சொல்லிற்று; "வேங்கடத்து உறைவார்க்கு நம" என்கையாலே, உபாயம் சொல்லிற்று; "அந்தி தொழுஞ்சொல்" என்கையாலே, பலம் சொல்லிற்று.

அவதாரிகை – இது தன்னை உபபாதிக்கிறார், மேல் மூன்று வாக்யத்திலே.

விளக்கம் - சூர்ணை 86-ல் கூறியதை, இனி வரும் மூன்று சூர்ணைகளில் விளக்குகிறார்.

வ்யாக்யானம் – "தொலைவில்லி மங்கலம்" இத்யாதி: அதாவது – "தொலைவில்லி மங்கலந் தொழும்" என்று அவனுகந்தருளின நிலத்தளவும் செல்ல சேஷமாயிருக்கும்படியைச் சொல்லுகிறவளவில் "தொழும்" என்று நமஸ்காரத்தைச்

சொல்லுகையாலே, ஸ்வரூபம் சொல்லிற்று என்கை. "வேங்கடத்து" இத்யாதி: அதாவது "வேங்கடத்து உறைவார்க்கு நம" என்று "திருவேங்கடமுடையானுக்கு சேஷம் நான்; எனக்குரியேனல்லேன்", என்று ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத ஸ்வரூப பாரதந்த்ர்யத்தைச் சொல்லுகையாலே, அவனே உபாயமென்னுமிடம் ஸித்திக்கையலே உபாயம் சொல்லிற்று என்கை. "அந்தி தொழுஞ்சொல்" இத்யாதி: அதாவது "அந்தி தொழுஞ்சொல்" என்று தாஸ்யரஸம் அதிசயித்தால் அதனுடைய சரமதசையிலே சொல்லக்கடவ "தொழுஞ்சொல்" என்று நமச்சப்தத்தைச் சொல்லுகையாலே பலம் சொல்லிற்று என்கை.

விளக்கம் - திருவாய்மொழி (6-5-1) – தொலைவில்லி மங்கலந் தொழும் - என்பதன் மூலம் எம்பெருமான் மிகவும் மகிழ்ந்தபடி வாசம் செய்யும் திவ்ய தேசத்தை அடைந்து துடிக்கும் ஜீவனின் தன்மையைக் கூறுகிறார். இங்கு உள்ள "தொழும்" என்ற பதம், நமஸ்காரத்தைக் கூறுவதால் இது ஜீவனின் ஸ்வரூபத்தை விளக்குகிறது. திருவாய்மொழி (3-3-6) – வேங்கடத்து உறைவார்க்கு நம - என்பதன் மூலம், "நான் திருவேங்கடமுடையானுக்கே அடிமை, நான் எனக்கு உரியவன் அல்லன்", என்ற எண்ணம் வெளிப்படுகிறது. இதன் மூலம், தான் அவனையே அண்டி உள்ளதும், தன்னைக் காத்துக் கொள்ள தனக்குத் தகுதி இல்லை என்று எண்ணுவதும் வெளிப்படுவதால், உபாயம் என்பதும் நம என்ற பதத்தால் கூறப்பட்டது. திருவாய்மொழி (10-8-7) - அந்தி தொழும் சொல் – என்பதன் மூலம், அவனுக்குக் கைங்கர்யம் செய்வதன் மூலம் பெரும் ஆனந்தம் விளைவதைக் கூறி, நம என்ற பதத்தின் மூலம் அவனுடைய மகிழ்ச்சிக்கே உள்ள கைங்கர்ய பலம் கூறப்படுகிறது.

89. "உற்றதும் உன்னடியார்க்கடிமை" என்கிறபடியே இதிலே பாகவதசேஷத்வமும் அநுஸந்தேயம்.

அவதாரிகை - இப்பதத்திலே, ததீயசேஷத்வமும் ஆர்த்தமாக அநுஸந்தேய மாகையாலே, அத்தை அருளிச் செய்கிறார் – உற்றதும் - என்று தொடங்கி.

விளக்கம் – நம: என்ற பதத்தின் மூலம் எம்பெருமானுக்கு மட்டுமே அல்லாமல் அவனது அடியார்களுக்கும் வசப்பட்டிருத்தல் உணர்த்தப்படுகிறது என்னும் இந்தக் கருத்தை விவரிக்கிறார்.

வ்யாக்யானம் - அதாவது "நின் திருவெட்டெழுத்துங்கற்று நானுற்றதும் உன்னடியார்க்கு அடிமை" என்று திருமந்திரங் கற்றத்தால் நான் உற்றதும் உன்னடியார்க்கு அடிமை என்னும் இவ்வர்த்தத்திலே என்கிறபடியே, அஹங்கார மமகாரங்கள் நிவ்ருத்தமாய், பகவச்சேஷத்வம் உள்ளபடி ப்ரகாசிக்கிற

இந்நமஸ்ஸிலே தத்காஷ்டையான பாகவத சேஷத்வமும் அநுஸந்திக்கவேணும் என்கை.

விளக்கம் - பெரிய திருமொழி (8-10-3) - நின் திருவெட்டெழுத்துங்கற்று நானுற்றதும் உன்னடியார்க்கு அடிமை – எட்டு எழுத்து கொண்ட உன்னுடைய திருநாமத்தை நான் கற்றேன், அதன் மூலம் உன் அடியார்க்கும் அடிமையானேன் – என்றது. இதன் கருத்து – எட்டு எழுத்து கொண்ட திருமந்திரத்தின் உட்பொருள், அவனது அடியார்களுக்கும் அடிமைப்பட்டு இருப்பதே என்பதாகும். இதன்படி, நம: என்ற பதம் மூலம், அஹங்காரம் மமகாரம் நீங்கப்பெற்று, எம்பெருமானுக்கு அடிமை என்று உணர்தப்பட்டாலும், நம: என்பதன் மூலம், அவனது அடியார்களுக்கு அடிமைப்பட்டிருத்தலும் உணர்த்தப்படுவதை அறியவேண்டும்.

90. இது அகாரத்திலே என்றுஞ் சொல்லுவர்கள்; உகாரத்தில் என்றுஞ் சொல்லுவர்கள்.

அவதாரிகை – இப்படி ஆர்த்தமாக அநுஸந்திக்கப்படும் பாகவத சேஷத்வந்தான், இந்நமஸ்ஸிலன்றிக்கே ஸ்தலாந்தரங்களிலே சொல்லுவாருமுண்டாகையாலே, அத்தை அருளிச்செய்கிரார் - இது அகாரத்திலே என்றுஞ் சொல்லுவர்கள்; உகாரத்தில் என்றுஞ் சொல்லுவர்கள் – என்று.

விளக்கம் – நம: என்ற பதம் மூலம் உணரப்படுகின்ற அடியார்களுக்கும் அடிமை என்ற கருத்தானது, இந்தப் பதம் மூலம் மட்டும் அல்லாமல், வேறு இடத்திலும் உணர்த்தப்படுகிறது என்று சிலர் கூறுவார்கள். அதனை விளக்குகிறார்.

வ்யாக்யானம் – அதாவது சதுர்த்தியாலே ஆத்மாவினுடைய பகவச்சேஷத்வத்தைச் சொல்லுகையாலே, பகவச்சேஷத்வகாஷ்டையான இந்த பாகவத சேஷத்வாநுஸந்தாநம் அகாரத்திலேயென்றும் சிலர் சொல்லுவார்கள். அநந்யார்ஹ சேஷத்வத்துக்கு எல்லை ததீய சேஷத்வ பர்யந்தமாக நிற்கையாகையாலே, அநந்யார்ஹத்வ ப்ரதிபாதகமான உகாரத்திலேயென்றும் சிலர் சொல்லுவார்கள் என்கை. ஆர்த்தமாகையாலே, அவ்வவஸ் தலங்களிலும் சொல்லலாயிருந் தேயாகிலும் கந்தல் கழிந்தவிடத்திலே சொல்லுகையே உசிதமென்று கருத்து.

விளக்கம் - ப்ரணவத்தில் உள்ள அகாரத்தில் காணப்படும் நான்காம் வேற்றுமை மூலம், ஜீவன் எம்பெருமானுக்கு அடிமைப்பட்டவன் என்பதை மேலும் விரிவுபடுத்தி, அந்த அடிமைத்தனத்தின் எல்லை நிலமாக, அடியார்க்கு அடிமை

என்பது, அகாரத்தில் வெளிப்படுவதாக சிலர் கூறுவார்கள். உகாரத்தின் மூலம் – நான் எம்பெருமானுக்கு அடிமைப்பட்டவன் – என்பது மேலும் விரிவுபடுத்தப்பட்டு, அவனது அடியார்களைத் தவிர வேறு யாருக்கும் அடிமைப்பட்டவன் அல்லன் என்பதை உகாரம் விளக்குவதாகச் சிலர் கூறுவர். ”அடியார்களுக்கும் அடிமை” என்னும் இந்தக் கருத்து, அகாரம் மற்றும் உகாரம் ஆகியவற்றின் மூலமும் கூறப்பட்டிருந்தபோதிலும், நம: என்ற பதம் மூலம் மட்டுமே, அஹங்காரம் மற்றும் மமகாரம் ஆகிய விரோதிகள் கழிவதால், நம: என்ற பதத்தின் உட்பொருளாக இந்தக் கருத்தைக் கொள்வது சிறந்தது.

ஸ்ரீபிள்ளை லோகாசார்யார் திருவடிகளே சரணம்

ஸ்ரீமணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த

# சிறிய திருமடல்

(பகுதி – 16)

(மற்றெனக்கிங்காரானும் கற்பிப்பார் நாயகரே) - இத்துணிவுக்குப் புறம்பான வார்த்தை சொல்லிக் கற்பிப்பார் எனக்கு நாயகரல்லர். “பயிலுந் திருவுடையார் யவரேலுமவர் கண்டீர் பயிலும் பிறப்பிடைதோறு எம்மையாளும் பரமர்” என்றிருக்கும் நிலை தவிர்ந்தேன். இத்துணிவுக்கு உடன் பட்டார் எனக்கு நாயகர்; ”க்ரமப்ராப்தி பொறுக்க வேணும்” என்றிருப்பார் எனக்கு நாயகரல்லர். “அன்னையென் செய்யிலென் ஊரான் சொல்லிலென் ?”

விளக்கம் – (மற்றெனக்கு இங்கு ஆரானும் கற்பிப்பார் நாயகரே)– எனது இத்தகைய மடல் எடுக்கும் துணிவை ஆதரிக்காமல், இதற்குப் புறம்பான சொற்கள் கூறி, என்னைத் திருத்த முயற்சி செய்பவர்கள் எனக்கு நாயகர் அல்லர் (எனக்கு வேண்டப்பட்டவர்கள் அல்லர் என்று கருத்து) இத்தகைய துணிவுக்கு . ஒப்புக்கொள்பவரே எனது நாயகர் ஆவர். ”சரியான நேரத்தில் அவனை அடையலாம்அது ,வரை நீ பொறுமையாக இரு”, என்று எனக்கு உபதேசிப்பவர்கள் எனக்குத் தலைவர் அல்லர். திருவாய்மொழியில் (5-3-6) - அன்னையென் செய்யிலென் ஊரான் சொல்லிலென் – என்று நம்மாழ்வார் அருளிச்செய்தது போன்றே இவள் நிலையும் உள்ளது.

(நான்) - இத்துணிவுக்குப் புறம்பானாரெல்லாரையும் விட்டிருக்கிற நான். (அவனை) - ஸ்வவ்யதிரிக்தரெல்லாரையும் விடுவித்தவனை. (நானவனை) - பந்தடிக்கவென்று புறப்பட்ட நான் குடக்கூத்தாடப் புறப்பட்டவனை என்றுமாம். வழி பறிக்கப் புறப்பட்டு வழிபறியுண்டேனென்றபடி.

விளக்கம் – (நான்) - இத்தகைய எனது துணிவான மடல் எடுக்கும் செயலுக்கு மறுப்பு கூறுபவர்கள் அனைவரையும் நான் என்னுடன் சேர்த்துக் கொள்ளாமல் தவிர்த்தேன். (அவனை) - அவனைத் தவிர்த்து மற்ற அனைவரையும் நான் துறக்கும்படிச் செய்த அவனை. (நான் அவனை) - பந்து விளையாடப் புறப்பட்ட நான், கூடக்கூத்தாடக் கிளம்பிய அவனைஅவனை வழிமறைத்து ., எனது

அழகைக் காட்டி, அவன் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளக் கிளம்பிய நான், அவனால் எனது உள்ளம் கொள்ளையடிக்கப்பட்டேன் .

(காரார் திருமேனி காணுமளவுபோய்) - காரார் திருமேனி கண்டதுவே காரணமாகவிறே அடியிலே இப்படிப்பட்டது. இத்துணிவு எவ்வளவும் செல்லக்கடவதென்னில் - காரார் திருமேனி கண்டதுமே காரணமாகப் பிறந்த துணிவு, காரார்திருமேனி காணுமளவும் செல்லக்கடவதிறே. இவளுடைய உத்யோகத்தைக் கண்ட தோழி, “அவனோடு ஸம்ஸ்லேஷிக்கக் கடவை”, என்ன, பண்டும் கண்ட மாத்ரத்திலேயாயிற்று இப்பாடு பட்டது. இப்போதும் கண்டு விடுமித்தனை.

விளக்கம் - (காரார் திருமேனி காணுமளவுபோய்) - மழைமேகம் போன்றுள்ள அவன் திருமேனியைக் கண்டதால் அல்லவோ இவள் இவ்விதம் துன்பம் கொள்வதற்குக் காரணமாக உள்ளது? உனது இத்தகைய மடல் எடுக்கும் துணிவு எத்தனை தூரம் செல்லும் என்றால் – கறுத்த அவனது திருமேனியைக் காணவேண்டும் என்ற ஆசையால் பிறந்த இந்தத் துணிவானது ,அப்படிப்பட்ட அவனது திருமேனியைக் காணும் வரை செல்லும். இவளது இந்த உறுதியைக் கண்ட தோழி, “நீ அவனுடன் சேர்வாயாக”, என்றாள். அதற்கு நாயகி, “அவனை முன்பு கண்ணால் பார்த்ததால் மட்டுமே இத்தகைய துன்பம் எனக்கு வந்தது . இப்போதும்அவனைக் கண்டால் மட்டுமே போதுமானது“, என்றாள்.

நீ காணும்படி என்னென்னில்: (சீரார் திருவேங்கடமே) - அவன் குணங்கள் கொண்டாடி யிருக்கும் தேசமெங்கும் புக்கு, என் வடிவைக் காட்டி, அவன் குணத்தையழித்துப் பெறக்கடவேன். (சீரார் திருவேங்கடமே) - நித்ய ஸூரிகளுக்கும் ஸம்ஸாரிகளுக்கும் ஒக்க முகங்கொடுத்துக் கொண்டு நிற்கிற நிலையாயுள்ள ஏற்றமுண்டிறே திருமலைக்கு; அங்கே சென்று, என் வடிவைக் காட்டி அவன் உபயவிபூதிக்கு ஆளாகாதபடி பண்ணுகிறேன்.

விளக்கம் – தோழி நாயகியிடம், “அவனை நீ எவ்விதம் காண்பாய்?”, என்று கேட்டாள். அதற்கு மேலே கூறுகிறாள் .(சீரார் திருவேங்கடமே) அவனது - திருக்கல்யாணகுணங்கள் வெளிப்படும் வண்ணம் அமைந்துள்ள திவ்யதேசங்கள் அனைத்திற்கும் செல்வேன்எனது இளைத்த . மேனியைக் காண்பித்து, அவனது குணத்தை அழித்து (குணத்தை அழிப்பது என்றால், அவனது குணத்தைப் பற்றி மற்றவர்கள் கொண்டிருக்கும் உயர்ந்த எண்ணைத்தை நீக்குதல் என்று கொள்ளவேண்டும்), அவனை என்னிடம் ஓடி வரச் செய்வேன் .(சீரார் திருவேங்கடமே) - நித்யஸூரிகளுக்கும் ஸம்ஸாரிகளுக்கும் ஒரே போன்று, தனது திருமேனியைக் காண்பித்தபடி நிற்கும் ஏற்றமானது திருமலைக்கு உண்டுஅங்கே . சென்று எனது துன்பப்பட்ட நிலையைக் காண்பித்து ,அவன் இந்த உலகிற்கும் அந்த உலகிற்கும் நாயகனாக நிற்கும் தகுதியை இழக்கும்படிச் செய்து விடுகிறேன்.

(திருக்கோவலூரே) – ”ஆச்ரிதர் இரண்டு மூன்று பேர் நின்ற மண்” என்று அம்மண்ணை யுகந்து “வாசல் கடைகழியா உட்புகா காமர் பூங்கோவலிடைகழியே பற்றி” என்று நிற்கிறானாக ப்ரஸித்தமிறே. அங்கே சென்று, “அவன் ஆச்ரிதையான என்னை கைவிட்டபடி பாருங்கோள்” என்று என் வடிவைக் காட்டுகிறேன்.

விளக்கம் – (திருக்கோவலூரே) - ஆழ்வார்கள் இரண்டு பேர் அமர்ந்து, பின்னர் மூன்று பேர் அமர்ந்த இடம் என்ற காரணத்தால் அவன் அந்த திவ்யதேசத்தை மிகவும் நேசித்தவனாக, அங்கேயே நிற்கிறான் .இதனை முதல் திருவந்தாதியில் (86) - வாசல் கடைகழியா உட்புகா காமர் பூங்கோவலிடைகழியே பற்றி – என்று அருளிச்செய்தார். அங்கு சென்று ,“அவனது அடியாளாகிய என்னை அவன் கைவிட்ட நிலையைப் பாருங்கள்”, என்று அனைவரிடமும் கூறுகிறேன்.

(மதிள் கச்சி ஊரகமே) - உள்ளுக்கிடக்கிற வஸ்துவின் சீர்மைக்குப் போரும்படியாக மதிலையுடைய திருக்கச்சியில் திருவூரகத்திலே எல்லாரோடும் வரையாதே பொருந்தும் ஸ்வபாவனென்று தெரியும்படி திருவுலகளந்தருளின வ்யாஜத்தை ப்ரகாசிப்பித்து நிற்கிறானிறே; அங்கே சென்று என் வடிவைக் காட்டி, “என்னை வரைந்தபடி பாருங்கோள்”, என்கிறேன்.

விளக்கம் - (மதிள் கச்சி ஊரகமே) – உள்ளே இருக்கின்ற பரமாத்மாவின் மேன்மைக்கு ஏற்றபடி, வலிமையான திருமதிளை உடைய காஞ்சீபுரம். அங்கு உள்ள திருஊரகத்தில், ஏற்றத்தாழ்வு இல்லாமல் அனைவருடனும் கலந்து பழகும் ஸ்வபாவம் உள்ள அவன், ஊராருக்குத் தெரியும்படியாக உலகம் அளந்த நிலையில் நிற்கிறான். அங்கு சென்று, “உங்கள் அனைவரையும் தனது திருவடியால் தீண்டியவன், என்னை மட்டும் கைவிட்டான், பாருங்கள்”, என்று கூறுவேன்.

(பேரகமே) - மதிளுமின்றியே ஆற்றங்கரையிலே திருப்பேரிலே வழிப்போவாரும் ”தன்னைக்காணும்படி” திறந்த வாசலாத் தன்னை ஸர்வஸ்வதாநம் பண்ணிக் கிடக்கிறானென்று ப்ரஸித்தமிறே. அங்கே சென்று என் வடிவைக் காட்டி, “அவன் ஸர்வஸ்வதாநம் பண்ணுகிறபடி பாருங்கோள்”, என்கிறேன்.

விளக்கம் – (பேரகமே) – திருஊரகம் போன்று மதிள்கள் இல்லாமல், ஆற்றுக்கு நடுவில், திருப்பேர் நகரில் உள்ளான். அங்கு, அந்த வழியாகச் செல்பவர்கள் யார் வேண்டுமானாலும் தன்னை எளிதாகக் காணலாம்படி, திறந்து கிடக்கும் வாசல் கொண்டு, தன்னையும் தனது செல்வத்தையும் நமக்குத் தானம் அளித்தபடி

உள்ளான் என்பது அனைவரும் அறிந்ததே. அங்கு சென்று, “இவன் அனைத்தையும் தானம் செய்தபடி உள்ள லக்ஷணத்தை, இதோ என்னைக் கண்டு உணருங்கள்”, என்பேன்.

(பேரா மருதிறுத்தான் வெள்ளறையே) - பேராமருது என்றது அஸுராவேசத்தாலே பேராதே நின்றதென்னுதல், தளர்நடையிட மருதிறுத்தானென்னுதல். ஸ்தாவரங்களிலுமகப்பட அஸுராவேசமுண்டாயிரா நின்றது; அஸுரா வேசமில்லாதபடி பரிவருள்ள திருவெள்ளறையிலே நின்றானாயிருக்கிறானிறே. அங்கே சென்று என் வடிவைக் காட்டி, “பரிவையான எனக்கு முகந்தந்தபடி பாருங்கோள்”, என்கிறேன்.

விளக்கம் - (பேரா மருதிறுத்தான் வெள்ளறையே) – பேராமருது என்றால் எத்தனை அசுரவேகத்தாலும் அசைக்க இயலாத மருதமரங்கள் என்று பொருள். அப்படிப்பட்ட வலிமையான அவற்றை இவன் தவழ்ந்து சென்று சரித்தான். திருஆயர்பாடி என்பது கம்சனின் எல்லைக்குள் இருந்ததால், அங்குள்ள மரங்களுக்கும் அசுரவலிமை இருந்தது. ஆனால் அப்படிப்பட்ட அசுரவேகம் இல்லாமல், மிகுந்த பரிவு நிறைந்தவர்கள் வாழும் இடமாகத் திருவெள்ளறை உள்ளதால், இவனும் பரிவுடனேயே நிற்கிறான். அங்கு சென்று, “இவன் மீது மிகுந்த பரிவுள்ள எனக்கு இவன் தனது பரிவைக் காண்பித்த லக்ஷணம் காணுங்கள்”, என்று கூறுவேன்.

(வெஃகாவே) – ஆச்ரிதன் “போ” என்ன, படுக்கை சுருட்டிக் கொண்டு அவன் பின்னே போய், “கிட” என்ன, காற்கடை தலைமாடாகக் கிடந்தானாக “ஆச்ரிதன் சொன்னபடி செய்தான்” என்று ப்ரஸித்தமிறே; நான் சொன்னபடி செய்தானாகவில்லையே என்று என் வடிவைக் காட்டுகிறேன்.

விளக்கம் – (வெஃகாவே) – திருமழிசையாழ்வார், “நீயும் என்னுடன் இங்கிருந்து கிளம்பு”, என்று கூற, தனது படுக்கையைச் சுருட்டிக் கொண்டு, அவர் பின்னேயே சென்றான். மீண்டும் ஆழ்வார், “இங்கேயே கிடப்பாயாக”, என்று கட்டளையிட, முன்னர் தனது திருவடி இருந்த இடத்தில் இப்போது தலையை வைத்து, மாற்றிச் சயனித்தான். ஆக ஆழ்வார் சொன்னபடி செய்தான். ஆனால் நான் சொன்னபடி இவன் செய்யவில்லையே என்று அனைவரிடமும் கூறுவேன்.

(பேராலி) - பிறந்த ஊருமாய்த் திருப்பதியுமாய் எனக்குத் தன்னை முற்றூட்டாக்கு கிறானென்றிறே ப்ரஸித்தி; அங்கே சென்று எனக்கு முற்றூட்டாக இவன் உடம்பு

கொடுத்தபடி என்னுடம்பிலே பாருங்கோள் என்கிறேன். "ஏன்றான்? இவள் திருவாலியிலேயன்றோ இருக்கிறது. திருவாலியிலே சென்று பழியிடுவே னென்னுமது கூடாதே", என்னில் - அதுவும் அஸத் கல்பமாய்க் கிடக்கிறது காணும் இவளுக்கு.

விளக்கம் – நான் பிறந்த ஊரும், திவ்யதேசமும் ஆகிய திருவாலியில் எனக்கு அவன் தன்னையே முழுவதுமாக அளிக்கிறான் என்று ஊரில் அனைவரும் எண்ணுகின்றனர். ஆனால், அவன் எனக்குத் தன்னை அளிக்கும் லக்ஷணத்தை நீங்கள் அங்கு சென்று அறிந்து கொள்ளுங்கள் என்று கூறுவேன். இவள் இருப்பது திருவாலி நகரத்திலே அல்லவோ? பின்னர் இவள் ஏன், "அங்கு சென்று அவன் மீது பழி கூறுவேன்", எனக் கூறவேண்டும்? இவளது துன்பம் காரணமாக, தான் அந்தத் திவ்யதேசத்திலேயே இருந்தபோதும், அந்த இடம் வெகுதூரத்தில் உள்ளதாகவே தோன்றுகிறது.

(தண்கால்) – குளிர்ந்த காற்றுப்போலே ஆச்ரிதருடைய ச்ரமம் தீர உதவும் ஸ்வபாவ னென்றிறே தண்கால் என்று பேராயிற்று; அங்கே சென்று, என் ச்ரமம் தீர உதவினபடி பாருங்கோள் என்று என் வடிவைக் காட்டுகிறேன்.

விளக்கம் – (தண்கால்) – குளிர்ந்த காற்றானது எவ்விதம் துன்பங்களை நீக்குமோ அது போன்று இவன் இந்த இடத்தில், அடியார்களின் துன்பங்களை நீக்குகின்ற ஸ்வபாவத்துடன் உள்ளான் என்பதால் அல்லவோ, இந்த இடம் தண்கால் எனப்பட்டது. அங்கு சென்று எனது துன்பத்தைத் தீர்க்க இவன் உதவிய லக்ஷணத்தைப் பாருங்கள் என்று கூறுவேன்.

(நறையூர்) - தன் ஸ்வாதந்த்ர்யமெல்லாம் செல்லாமே, பிராட்டி ஸ்வாதந்த்ர்யமேயாக எண்ணி அவளுக்கு பவ்யனாயிருக்கிறானென்று ப்ரஸித்தமிறே. அங்கே சென்று, இவன் பிராட்டிக்கு பவ்யனானபடி என் வடிவில் பார்த்துக் கொள்ளுங்கோள் என்கிறேன்.

விளக்கம் – (நறையூர்) – தன்னுடைய சுதந்திரம் ஏதும் பலிக்காமல், பெரியபிராட்டிக்கே முழுச்சுதந்திரம் அளித்து, அவளுக்கு அடங்கி நடப்பவனாக நிற்கும் இடம் அல்லவோ? அங்கு சென்று, "இவன் பிராட்டிக்கு அடங்கி நடக்கும் லக்ஷணம், பிராட்டிக்கே உரியவளான என்னிடம் இவன் நடந்து கொள்ளும் விதத்தைக் கண்டு அறிந்து கொள்ளுங்கள்", என்று கூறுவேன்.

(திருப்புலியூர்) - மெல்லிலைச் செல்வ வண்கொடிப் புல்க வீங்கிளந்தாள் கமுகிறே. அவன் நின்ற ஊரில் ஸ்தாவரங்களுமுட்பட பரஸ்பரம் மிதுநமாய்ச் சேர்ந்து

வர்த்திக்குமென்றிறே ப்ரஸித்தி; அங்கே சென்று என்னோடு சேர்ந்தபடி பாருங்கோள் என்கிறேன்.

விளக்கம் - (திருப்புலியூர்) – திருவாய்மொழி (8-9-7) - மெல்லிலைச் செல்வ வண்கொடிப் புல்க வீங்கிளந்தாள் கமுகின் – என்று கூறுவது போல், அவன் உள்ள இந்த திவ்யதேசத்தில், அவனுடன் சேர்ந்தபடி தாவரங்களும், ஆணும், பெண்ணும் வாழ்வது ப்ரஸித்தம் அல்லவோ? அங்கு சென்று, “அவன் என்னுடன் சேர்ந்தபடி உள்ள லக்ஷணம் காணுங்கள்”, என்று கூறுவேன்.

(ஆராமம் சூழ்ந்தவரங்கம்) - உகந்தருளின தேசங்களெல்லாம் பகலிருக்கையாய் ஆச்ரித ரக்ஷணத்துக்கு ஏகாந்த ஸ்தலமென்று கோயிலிலே நித்யவாஸம் பண்ணுகிறானா யிருக்கிறது. “வன்பெருவானகமுய்ய” இத்யாதியிற் சொல்லுகிறபடியே; அங்கே சென்று என் வடிவைக் காட்டி என்னுடைய ரக்ஷணம் பண்ணினபடி பாருங்கோள் என்கிறேன்.

விளக்கம் - (ஆராமம் சூழ்ந்தவரங்கம்) – இவன் மிகவும் மகிழ்ந்து எழுந்தருளியுள்ள திவ்யதேசங்களால் சூழப்பட்ட திருவரங்கம். அடியார்களைக் காப்பதற்கான ஒரே இடம் என்பதற்காக இங்கே நித்யவாஸம் செய்கிறான். பெருமாள் திருமொழி (1-10) – வன்பெருவானகமுய்ய – கூறுவது போல், விண்ணுலகையும் இங்கிருந்தபடி நியமிக்கிறான். அங்கு சென்று, “இவன் என்னைக் காப்பாற்றும் லக்ஷணம் பாருங்கள்”, என்று கூறுவேன்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்த

## திருமாலை

(பகுதி – 6)

(பவளவாய்க் கமலச் செங்கண்) – திருமேனி ஒரு பெருங்கடல் போலேயாய், அதிலே கொண்டு முழுக்கும் சுழிகள்போலேயாய்த்து, திவ்யாவயவங்களிருப்பது. திருமேனிக்குப் பரபாகமான பவளம் படர்ந்தாற் போலேயாய்த்துத் திருவதரத்தில் அழகிருப்பது. மலையிலே பவளம் படர்ந்தாற் போலேயிருக்கை. சந்த்ரோதயத்தில் கடல் கொந்தளித்தாற்போலே ஆஸ்ரிதமுகசந்த்ர தர்சநத்தாலே வந்த அழகு ஓதமேறினபடி. வசஸா ஸாந்த்வயித்வா என்கிறபடியே ஆஸ்ரிதரை வினவுகிற திருவதரமிருக்கிறபடி.

விளக்கம் - (பவளவாய்க் கமலச் செங்கண்) – இவனது திருமேனி ஒரு பெரிய கடல் போல் உள்ளது. அந்தக் கடலில் அனைவரையும் மூழ்கடிக்கவல்ல சுழிகள் போன்று திருக்கண்கள் முதலான அவயவங்கள் (உறுப்புகள்) உள்ளன. மலையில் அழகாகப் பவளம் படிந்துள்ளது போன்று, இவன் திருமேனியில் அழகாக திருஅதரம் உள்ளது. சந்த்ரனைக் கண்டவுடன் கடலானது பெரிதாகப் பொங்கி நிற்கும். இது போன்று இவனது திருமுகமானது, ஆழ்வாரின் சந்த்ரன் போன்ற முகத்தைக் கண்டவுடன், அழகாகப் பரிவைப் பொங்கி நிற்கிறது. இராமாயணம் யுத்தகாண்டம் - வசஸா ஸாந்த்வயித்வா – நல்வார்த்தைகள் கொண்டு விபீஷணனைத் தேற்றினான் – என்பது போன்று தன்னை, “நலமா”, என்று விசாரிப்பதாக இவன் திருஅதரம் உள்ளது.

(கமலச் செங்கண்) – ஜீவநாத்ருஷ்டத்தாலே இத்திருப்பவளத்துக்குத் தப்பினாரையும் அகப்படுத்திக் கொள்ளும் கண்கள். வாயால் சொல்லமாட்டாதே குறையும் கண்ணாலேயிறே தலைக்கட்டுவது. லோசநாப்யாம் பிபந்நிவ என்கிறபடியே. அகவாயில் வாத்ஸல்யாதி குணங்களுக்கு ப்ரகாசகமாயிருக்கிறபடி. மென்மை, குளிர்த்தி, நாற்றம் தொடக்கமானவற்றுக்கு ஒரு போலியாமத்தனையல்லது அகவாயில் தண்ணளியெல்லாம் இல்லையே அதுக்கு. “விக்ரஹமில்லை, குணமில்லை, விபூதியில்லை என்கிற ஸூந்யவாதிகள் ஸஞ்சரிக்கிற ஸம்ஸாரத்திலே இப்படி விக்ரஹத்தை ஆதரித்த இவர்கள் உத்தேச்யராகப் பெற்றோமே”, என்று ஜீயர் அருளிச்செய்வர்.

விளக்கம் – அவனது திருமேனி என்னும் பெரும் கடலில் விழுந்தவர்கள், அவனுடைய திருஅதரம் என்னும் சுழியில் அகப்படாமல் தப்பினாலும், அவனது திருக்கண்கள் அவர்களைப் பிடித்துக் கொள்ளும். வாயால் கூறி முடிக்க இயலாதவற்றைக் கண்களால் அல்லவோ கூறுவர்! இராமாயணம் யுத்தகாண்டம் - லோசநாப்யாம் பிபந்நிவ – கண்களால் பருகினான் – என்பது காண்க. மனதில் உள்ள வாத்ஸல்யம் முதலான குணங்களை திருக்கண்கள் அல்லவோ நமக்கு உணர்த்துகின்றன. மென்மை, குளிர்ச்சி, நறுமணம் முதலானவைகளுக்குத் தாமரை மலர் ஒப்பாக உள்ளது என்றாலும், இவனது திருக்கல்யாண குணங்களுக்குத் தாமரை ஒப்பாகாது அன்றோ? ஆகையால் கமலச் செங்கண் என்றார். "விக்ரஹமில்லை, குணமில்லை, விபூதியில்லை என்று கூறும் ஸூந்யவாதிகள் இந்தப் பூமியில் அதிகம் உள்ளனர். இப்படிப்பட்ட இந்த உலகத்தில் இவ்விதம் திருமேனியைப் பெரிதும் போற்றும் ஆழ்வார்களை நாம் நமது ஸம்ப்ரதாயத்தின் தலைவர்களாகப் பெற்றோமே!", என்று நஞ்சீயர் வியப்பாராம்.

(அச்சுதா) – த்ருஷ்டாந்தமாகச் சொன்ன மலை, பவளம், தாமரை போலே நாள் செல்ல நாள் செல்ல செவ்வி மாறுதல், தான் அழிதல் செய்யாதே ஏகரூபமாயிருக்கை. ஸதைகரூபரூபாய என்னக்கடவதிறே. அதவா, இச்செவ்வி மாறாதே செல்லவேணுமென்று மங்களாசாஸநம் பண்ணுகிறாரென்றுமாம். "சேவடி செவ்வி திருக்காப்பு" என்னக்கடவதிறே. இவ்வழகிலே அகப்பட்டாரை ஒருநாளும் நழுவவிடாதவன் என்றுமாம்.

விளக்கம் – மேலே கூறப்பட்ட உதாரணங்களான மலை, பவளம், தாமரை முதலானவை நாட்கள் செல்லச்செல்ல அழிவது அவற்றின் இயல்பாகும். ஆனால் இவன் அது போன்று இல்லாமல், எப்போதும் இருப்பவன். விஷ்ணுபுராணம் (1-2-1) – ஸதைகரூபரூபாய – ஒரே போன்று மாறாமல் உள்ள திருமேனியைக் கொண்டவன் – என்பது காண்க. இப்படிப்பட்ட அழகு மாறாமல் எப்போதும் திகழவேண்டும் என்று இவர் வாழ்த்துவதாகவும் கொள்ளலாம். பெரியாழ்வார் - சேவடி செவ்வி திருக்காப்பு – என்றார் அல்லவோ! இப்படிப்பட்ட தன்னுடைய அழகில் ஈடுபட்டு நிற்பவர்களை எப்போதும் நழுவவிடாதவன் என்றும் கொள்ளவேண்டும்.

(அமரரேறே) – இவ்வழகை ஸதாதர்சநம் பண்ணும் போக்தாக்களைச் சொல்லுகிறது. காலமெல்லாம் இடைவிடாதே அனுபவியா நின்றாலும் எல்லை காணவொண்ணாதபடி அவ்வருகாயிருக்கை; "அயர்வறுமமரர்கள் அதிபதி" என்னக்கடவதிறே. அவ்வநுபவம் மாறினால் முடியுமவர்களென்று

தோற்றுகைக்காக, அநுபவத்தினுடைய அவிச்சேதத்தாலே அமரர் என்கிறது. ஸதா பச்யந்தி ஸூரய: என்னக்கடவதிறே.

விளக்கம் – (அமரர் ஏறே) – இப்படிப்பட்ட இவனது திருமேனி அழகை எப்போதும் அனுபவிப்பவர்களைக் கூறுகிறார். நித்யஸூரிகள் இவனது அழகை எப்போதும் அனுபவித்து வந்தாலும், இடைவிடாமல் அனுபவித்தாலும், இவனது அழகின் எல்லையைக் காண இயலாதபடி, அவர்களுக்கும் அப்பாற்பட்டு உள்ளவன் என்றார். திருவாய்மொழியில் (1-1-1) – அயர்வறும் அமரர்கள் அதிபதி – என்றார் அல்லவோ? நித்யஸூரிகளாகவே இருந்தாலும், இவனது அனுபவத்தில் ஏதேனும் இடையூறு உண்டானால், அவர்களும் தாழ்ந்துவிடுவர் என்பதைக் கூறுகிறார். வேதமானது - ஸதா பச்யந்தி ஸூரய: - நித்யஸூரிகள் அவனை எப்போதும் பார்த்தபடி உள்ளனர் – என்பது காண்க.

ஆனால் பிராட்டி, திருவடி, திருவநந்தாழ்வான் போல்வார் அனுபவிக்குமதாய், அதிக்ருதாதிகாரமாயிருக்கிறதோ? என்னில் (ஆயர்தம் கொழுந்தே) – மேன்மைக்கு எல்லையானவர்களுக்கு நியாமகனாயிருக்குமாபோலே, தாழ்வுக்கு எல்லையான இடையர்க்கும், பசுக்களுக்கும் ஸுலபனானபடி, வடிவழகும் மேன்மையும் நீர்மையும் ஒரு பசுங்கூட்டாயிறே பரதத்வமிருப்பது. (என்னும்) இஸ்ஸ்வபாவங்களை அனுபவித்தோ உமக்கு இவ்வினிமை பிறந்தது என்னில்; அங்ஙனன்று, திருநாமத்தினுடைய உக்திமாத்ரத்தாலே வந்த இனிமை.

விளக்கம் – இப்படியாக இவன் பெரியபிராட்டி, ஆதிசேஷன் போன்றவர்கள் அனுபவிக்கும்படி உள்ளானே, இவனை நம் போன்றவர்களால் அனுபவிக்க இயலுமோ என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார். (ஆயர்தம் கொழுந்தே) – மேன்மைக்கு எல்லையான நித்யஸூரிகளை நியமிப்பவனாக இருப்பது போன்று, எளிமைக்கு எல்லையான ஆயர்களாலும் பசுக்களாலும் நியமிக்கப்படுபவனாக, மிகவும் சுலபனாக உள்ள தன்மை. அழகான திருமேனி, மேன்மை, எளிமை போன்ற பலவும் கலந்த கூட்டு போன்று பரம்பொருள் உள்ளான். (என்னும்) – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "இப்படிப்பட்ட எனது திருநாமங்களில் விளக்கப்பட்ட குணங்களை நீவிர் அனுபவித்த காரணத்தால் உமக்கு இன்பம் உண்டானதோ?", என்றான். அதற்கு ஆழ்வார், "அப்படி அல்ல. உனது திருநாமத்தைக் கூறியதாலேயே இன்பம் உண்டானது", என்றார்.

(இச்சுவை தவிர) – இந்த ரஸத்தை விட்டு. சுவை = ரஸம். கைப்பட்டத்தை விட்டு. இவ்வறு சுவைக்கு வேறொரு சுவை இருந்தவிடம் தேடிப் போகச் சொல்லுகிறாயோ? இவருடைய அறுசுவை இருக்கிறபடி. திருநாமத்தை

உம்முடைய நாக்கிலேயிட்டுப் பாராமையிறே நான் உபதேசிக்க வேண்டுகிறது. (யான்) – திருநாமம் சொல்லுகைக்குப் பாங்கான நாவையுடைய நான். (யான்) – ஒரு தேசவிசேஷத்தே போய் அனுபவிக்குமளவும், விளம்பத்தை ஸஹியாத த்வரையையுடைய நான். (போய்) – கோவிலுக்கு அணித்தாயிருக்கையுமன்றியே நெடுங்கை நீட்டான அத்தூரமெல்லாம் போய். (இந்திரலோகம்) – நிரவதிகைச்வர்ய யுக்தனுடைய லோகம். "ப்ரஹ்மேந்த்ராதி சப்தங்கள் பரமாத்மவாசகம்" என்கிற வேதாந்தவாஸனை தோற்ற அருளிச்செய்கிறார். (ஆளும்) – ஆண்மின்கள் வாகனம் என்னும்படியே இஷ்டவிநியோகார்ஹ மாம்படியிருக்கை. (அச்சுவை இச்சுவை) – அது ச்ருதி ஸித்தம், இது ப்ரத்யக்ஷஸித்தம்; அது கேட்டார் வாய் கேட்டுப்போமது, இது கைப்பட்டது.

விளக்கம் – கையில் கிட்டியுள்ள இந்த சுவை விடுத்து. இப்படிப்பட்ட அறுசுவையை விடுத்து, வேறு சுவையை தேடிப் போகும்படி கூறுகிறாயா? இப்படிப்பட்ட உனது திருநாமத்தின் சுவையை பெரியபெருமாளாகிய உனது நாக்கில் இட்டுச் சுவைக்காமல், நான் அனுபவித்து உனக்கு உபதேசம் செய்யும்படி நிலைமை உள்ளது. (யான்) – திருநாமம் கூறுவதற்குத் தகுதி பெற்ற நாக்கை உடைய நான். (யான்) – பரமபதம் சென்றால் இந்தச் சுவை கிட்டும், ஆனால் அதுவரை பொறுத்துக் கொள்ள இயலாத வேகத்தை உடைய நான். (போய்) – இந்தப் பெரியகோயில் போன்று அருகில் இல்லாமலும், நீண்ட தூரத்தில் உள்ளதும் ஆகிய பரமபதத்திற்கு உள்ள தூரம் எல்லாம் கடந்து சென்று. (இந்திரலோகம்) – எல்லையில்லாத ஐச்வர்யம் கொண்ட லோகம். இங்கு இந்திர என்பது பரம்பொருளைக் குறிக்கும். எப்படி? "ப்ரஹ்மேந்த்ராதி சப்தங்கள் பரமாத்மவாசகம்" – ப்ரம்மன், இந்திரன் முதலான பதங்கள் அவர்களின் அந்தர்யாமியாக உள்ள பரமாத்மாவையே குறிக்கும் என்னும் வேதாந்த கருத்தைக் கூறுகிறார். (ஆளும்) – திருவாய்மொழி (10-9-6) – ஆண்மின்கள் வானகம் – என்னும்படி பரமபதமானது நித்யஸூரிகளாலும் முக்தி பெற்றவர்களாலும் ஆளப்படுகிறது. (அச்சுவை-இச்சுவை) – மேலே உள்ள பலவும் ச்ருதிகளால் அறியப்படுகிறது, கேள்வி ஞானம் மூலமே உணரப்படுவது; இதுவோ ப்ரத்யக்ஷமாக உள்ளது, கையில் அகப்படும்படி உள்ளது.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

# குலசேகராழ்வார் திருநக்ஷத்ர சிறப்புப் பகுதி

குலசேகராழ்வாரின் திருநக்ஷத்ரம் மாசி மாதம் புனர்பூசம் (18.02.2008) ஆகும். அதற்கான சிறப்புப் பகுதியாக பெரியதிருமுடியடைவு என்னும் நூலில் இருந்து குலசேகராழ்வார் பற்றிய பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன.

## கோயில் கந்தாடைநாயன் அருளிச்செய்த பெரியதிருமுடியடைவு

கௌஸ்துபாம்சபூதரான குலசேகராழ்வாராழ்வாருக்குத் திருவவதாரஸ்தலம் சோழ தேசத்தில் திருவஞ்சிக்களம். திருநக்ஷத்ரம் பராபவ வருஷம் மாசி மாஸம் சுக்லபக்ஷத்தில் தசமி வியாழக்கிழமை புனர்பூசம். திருத்தகப்பனார் க்ஷத்ரியோத்தமரான த்ருடவ்ரத மஹாராஜர்; திருத்தமையனார் சேரன். திருநாமங்கள் குலசேகரப்பெருமாள், குலசேகராழ்வார், கொல்லிகாவலன், சேரலர்கோன், குக்குடபுராதீசர். ஆசார்யர் ஸேனை முதலியார். திருவாராதனம் மன்னனார். பக்தி அவதாரங்களில் சக்ரவர்த்தித் திருமகனார் திருவடிகளிலும், அர்ச்சாவதாரங்களில் திருவேங்கடமுடையான் திருவடிகளிலும். இவர் அநுதினமும் ஸ்ரீவைஷ்ணவரோடே காலக்ஷேபம் பண்ணுகிறதும், ஸ்ரீமத்ராமாயண வ்யாக்யானம் கேட்கிறதும், ப்ரதிதினமும் ஸ்ரீரங்கயாத்ரை பண்ணுகிறதும், இப்படி பகவத்பாகவதாசார்ய கைங்கர்யபரராயிருப்பார். இவரருளிச்செய்த ப்ரபந்தங்கள் முகுந்தமாலை என்கிற ஸ்தோத்ரமும், பெருமாள் திருமொழி நூற்றைந்து பாட்டும். இவர் பாடின திருப்பதிகள் கோயில், திருமலை, அழகர்மலை, அயோத்தி, வித்துவக்கோடு, வண்புருடோத்தமம், திருக்கண்ணபுரம், திருச்சித்திரகூடம்.

இவர் அறுபத்தேழு திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார். ப்ரஹ்மதேசம் மன்னார் கோயிலிலே திருநாட்டுக்கெழுந்தருளினார்.

## தனியன்

குஷ்யதே யஸ்ய நகரே ரங்கயாத்ரா திநே திநே
தமஹம் சிரஸா வந்தே ராஜாநம் குலசேகரம்

பொருள் – யாருடைய தலைநகரத்தின் அன்றாடம் ஸ்ரீரங்கயாத்திரை பற்றிப் பேசப்படுகிறதோ, அப்படிப்பட்ட அரசரான குலசேகரப் பெருமாளை எனது தலையால் நான் வணங்குகிறேன்.